www.tamilarangam.net

# தோழர் சண்முகதாசனின் நினைவுகள்



*Shanmugathasan Centre for Marxist Studies - London 3-5-2004*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## புரட்சிகர வணக்கங்கள்

தோழர் சண் அவர்களின் புத்தக அறிமுக விழாவை முன்னிட்டு இச் சிறு பிரசுரத்தை மிக்க மகிழ்வுடன் வெளியிடுகின்றோம். இவ் வெளியீட்டுக்கு பங்கெடுத்து உழைத்த அனைவருக்கும் எமது நன்றிகள். தொடர்ந்தும் உங்கள் ஆதரவுகள் எமக்கு கிடைக்கவேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்.
வாழ்த்துக்கள்.

தோழமையுடன்
பாலன்.

**மார்க்சிய கற்கைக்கான சண்முகதாசன் நிலையம்**
**லண்டன் கிளை**
**03.05.2004**



# தேசம்

International Tamil Magazine
P O Box 35806, London, E11 3JX, UK
Tel / Fax : 0044 208 279 0354
jeyabalan.thesam@ntlworld.com

பொதுவுடமை இயக்கத்தின் புரட்சிகர அரசியல் முன்னோடியான என் சண்முகதாசனின் நூல் அறிமுக விழா அவரது உயிர் பிரிந்த இந்த பிரித்தானிய மண்ணில் நிகழ்வதும் அவரது நினைவுகள் இங்கு மீட்கப்படுவதும் பொருத்தமானதே. தோழர் சண்முகதாசன் அன்று கூறிவிட்டுச் சென்ற அரசியல் தீர்க்கதரிசனங்கள் இன்று நிஜமாகி உள்ளது. இன்றைய அரசியல் சூழலில் ஒரு அரசியல் தீர்க்கதரிசியையும் அந்த தீர்க்கமான அரசியல் சிந்தனையையும் சீர்தூக்கிப் பார்க்க இந்நினைவு நிகழ்வும் இச்சிறு கை நூலும் எமக்கு ஓரளவுக்கு உதவும் என்று நம்புகிறேன்.

தோழர் சண்முகதாசன் இலங்கையில் கம்யுனிஸ்ட் இயக்கத்தின் முன்னோடித் தலைவர்களில் ஒருவர் மட்டுமல்ல இலங்கையில் வாழ்ந்த ஒரு அரசியல் தீர்க்கதரசியுமாவார். அவர் மறைந்து பத்து வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் அவர் முன்வைத்த கருத்துக்களும் அவர் வெளிப்படுத்திய சிந்தனைகளும் சகாவரம் பெற்றுள்ளன. நான் ஒரு மார்க்சிய புத்திஜீவி அல்ல. ஒரு மாணவன் மட்டுமே. தோழர் சண் என்று அன்புடன் அழைக்கப்படும் நாகலிங்கம் சண்முகதாசன் அவர்களை அவரது நூல்களுக்கூடாகவும் (நூல்கள் : கார்ள் மார்க்சின் வாழ்வும் போதனைகளும், சண்முகதாசனின் கட்டுரைகள்) அந்நூல்களுக்கு வழங்கப்பட்ட பதிப்புரைகளினூடாகவுமே அறிந்து கொண்டேன். இந்நிகழ்வை ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற விருப்பு அப்போதே உருவானது. இந்நிகழ்வை மார்க்சிய கற்கைகளுக்கான சண்முகதாசன் நிலையத்துடன் இணைந்து நடாத்துவதில் தேசம் சஞ்சிகை பெருமை அடைவதுடன் ஒரு வரலாற்றுக் கடைமையைச் செய்த திருப்தியும் ஏற்படுகிறது.

தமிழ் மக்களின் கால் நூற்றாண்டு கால விடுதலைப் போராட்டம் இன்னமும் பண்பு மாற்றம் ஒன்றுக்கு தயாரானதாகத் தெரியவில்லை. இன, மத, சாதிய, பிரதேச வேறுபாடுகளால் இலங்கை மக்கள் இன்னமும் பிளவுண்டு போயுள்ளனர் போராட்டத்தின் நேசசக்திகள் யார்? எதிரிகள் யார்? என்ற அடிப்படையான அம்சங்கள் கூட இன்னமும் அடையாளம் காணப்படவில்லை. இதற்கு காரணம் தோழர் சண் குறிப்பிட்டது போல சரியான தத்துவார்த்த வழிகாட்டல் இல்லாமல் ஒரு கட்சியோ ஒரு இயக்கமோ ஒரு அடிதானும் முன்னுக்கு வைக்க முடியாது என்பதாகத்தான் இருக்க முடியும். ஒன்றுபடுத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தக்கூடிய சக்திகளை ஒன்றுபடுத்தவும் எதிரியாகிய ஏகாதிபத்திய - மேலாதிக்
க சக்திகளையும் அவர்களுக்கு உடந்தையான உள்ளூர்ப் பிற்போக்கு சக்
திகளையும் தனிமைப்படுத்தவும் வேண்டிய கடமை முதன்மையானது. இ
தையும் ஒரு சரியான தத்துவார்த்த வழிகாட்டலின் மூலமே முன்னெடுக்க இ
யலும் என்று தோழர் சண் போராட்டத்தின் ஆரம்பகாலங்களில் குறிப்பிட்டது
கால்நூற்றாண்டுகளின் கடைப்பிடிக்கப்படாதது எமது போராட்டத்தின் அரசியல்
வறுமையே. தோழர் சண் போன்ற தலைவர்கள் இன்று எம்மத்தியில் இல்
லாதது மிகவும் வேதனையானது.

தோழர் சண் இனப்பிரச்சனைக்கான தீர்வு பற்றிக் குறிப்
பிடுகையில் இலங்கை அரசாங்கமும் சிங்களப் பேரினவாத சக்திகளும் தமிழ்
மக்கள் ஒரு தேசம் என்ற உண்மையையும் அதனால் அவர்களுக்கு சுயநிர்
ணயத்துக்கான உரிமை உண்டு என்பதையும் ஏற்க மறுக்கின்றமையே இ
னநெருக்கடிக்குத் தீர்வு காணமுடியாமல் இருப்பதற்கான பிரதான காரணம்
என்று குறிப்பிட்டு இருந்தார். ஒரு தசாப்தத்திற்கு முன்னர் அவர் சுட்டிக்காட்
டியதை இன்று சர்வதேசம் சுட்டிக்காட்டுகிறது. இந்த உரிமை ஏற்கப்பட்டு,
ஒப்புக் கொள்ளப்படாமல், இன்றைய தமிழர் பிரச்சனைக்கு எந்தத் தீர்வும்
காண முடியாது. என்பது அவர் மறைந்து 10 ஆண்டுகளுக்குப் பின் இன்று
தடைப்பட்டு நிற்கும் பேச்சுவார்த்தையில் வெளிப்பட்டு உள்ளது.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னர்
தான், அந்த மக்களிடம் முற்போக்கான சிங்கள சக்திகள், தனிநாட்டை
அமைப்பதற்காக அச்சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்த வேண்டாம் என்று
கேட்டுக்கொள்ள முடியும் என்றும் சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்
பதானது சிங்கள தமிழ் மக்கள் மத்தியில் இருந்து சாதி, மத, மொழி
வேறுபாடுகளின்றி புரட்சிகர சக்திகளை ஒன்று திரட்டுவதை வேண்டி நிற்கும்
ஜனநாயகப்புரட்சியின் ஒரு பகுதியாகும். என்றும் அவர் கூறியுள்ளார்.

மேலும் பிரித்தானிய காலனிய நாட்களில் நன்கு அறியப்பட்ட சிவில்
சேவையாளரான லெனார்ட் வூல்.ஃப், இலங்கைச் சிறுபான்மை இனங்களது பிரச்
சனைக்கு சுவிஸ்லாந்தின் கன்ரோன் முறையே மிகப் பொருத்தமானது எனக்
கருதினார். அதனை தோழர் சண்முகதாசன் வரவேற்றதுடன் ஆதரித்து எழு-
தியும் உள்ளார். சுவிற்சர்லாந்தில் உள்ளதைப் போன்று குறைந்தது 4 கன்
ரோன்கள் உருவாக்கப்படலாம் என்று தோழர் சண், லெனார்ட் வூல்.ஃப்பை
மேற்கோள்காட்டி எழுதி உள்ளார். கரையோரச் சிங்கள மாகாணங்கள், கண்
டியச் சிங்கள மாகாணங்கள், தமிழ் வட மாகாணம், தமிழ் கிழக்கு
மாகாணம், அதைவிட வந்தேறு குடிகளான இந்தியத் தமிழர் பெரும்பான்
மையாக வாழும் பகுதிகளைக் கொண்ட ஒரு ஐந்தாவது கன்ரோனையும்
தேயிலைத் தோட்டங்களில் உருவாக்க இயலும் எனவும் அவர் எழுதி உள்
ளார். தோட்டத் தொழிலாளர்களுக்கு ஒரு தனி அலகு வழங்க வேண்டும் என்
று கோரி இருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறான ஒரு அமைப்பிற்கு இலங்
கையும் அதன் உட்பிரிவுகளும் அளவிற் சிறியன என்ற வாதம் செல்லாது
என்பதை தோழர் சண் புள்ளி விபரங்களுடன் அன்றே நிறுவி உள்ளார்.

தோழர் சண்ணினுடைய இந்த நிகழ்வில் அவருடைய புரட்சிகர சிந்
தனைகளையும் அந்த சிந்தனைகளை உருவாக்கிய மார்க்சிய லெனினிய
மாஓ சேதுங் தத்துவங்களையும் நாம் கற்றுத் தெரிந்திருப்பது
அவசியமானது. இன்றைய சூழலில் மிகவும் உதவக் கூடியது.

த ஜெயபாலன்
தேசம்.
3 மே 2004



மு. சிவலிங்கம்

# தோழர் சண் புரட்சிகரக் கருத்துக்களும் பாராளுமன்ற அரசியலும்

இலங்கை என்ற இனிய திருநாட்டில் வாழும் சகல மக்களும் சுரண்
டலற்ற ஏற்றத்தாழ்வற்ற சோசலிச பொருளாதார அமைப்பில் வாழ்வதற்கு,
நாட்டில் நிலவும் தரகு முதலாளித்துவ நவகாலனித்துவ அமைப்பு மாற்றப்பட
வேண்டும் எனவும் அவ்வாறான அமைப்பு மாற்றப்படுவதற்கு தொழிலாளர் வர்
க்கத்தை உட்கருவாகக் கொண்ட விவசாயிகள், புத்தி ஜீவிகள் இணைந்த
கூட்டணி மூலமே இது சாத்தியமாகும் எனவும் தோழர் சண் நம்பினார்.

அவர் நம்பிச் செயற்பட்ட கருத்துக்கள் இலங்கை மண்ணில் மலர்
வதற்கு சாதகமான சூழல் அன்றும் இன்றும் காணப்படுகிறதா? என்பதே
பிரதான கேள்வியாக அமைகிறது. சமூகம் என்பது வர்க்கப் போராட்டத்தின்
உற்பத்தியாகும். எனவே சமூக மாற்றம் என்பது படிப்படியான வளர்ச்சி என்
பதைவிட புரட்சிகரமானது எனக் குறிப்பிடுவதே பொருத்தமானது. சமூகங்கள்
ஒரு குறிப்பிட்ட வளர்ச்சிக் கட்டத்தை அடைந்ததும் மாற்றத்திற்கு உட்
படுகிறது. இவ்வளர்ச்சி என்பது முரண்பாடுகளினூடாகவும், சமூக உராய்
வுகளினூடாகவும், மாற்றத்தைப் பெறுகிறது. சமூகமும் வரலாறும் மனிதனுக்
கு வெளியில் நடைபெறுவதில்லை. மனிதனின் செயற்பாடகளாலும், அவர்கள்
சமூக வர்க்கம் ஒன்றின் அங்கத்தவர்கள் என்ற வகையிலும் சமூகத்தையும்
உலக வரலாற்றையும் படைக்கின்றனர்.

இந்த மனிதர்கள் யார்? எனில் உழைக்கும் மக்களைத் தவிர வேறு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எவராகவும் இருக்க முடியாது. ஆனால் இம் மக்கள் வணிகப் பண்டங்களாக கருதும் நிலை முதலாளித்துவ சமூதாயத்தில் உருவாக்கப்பட்டு உள்ளது. அவனது உழைப்பை மட்டும் சுரண்டி சமூகத்தில் அம்மனிதனை அந் நியமாக்கும் சூழல் தொடர்ந்து நிலவுகிறது. சந்தையில் நிலவும் கேள்வி நிரம்பலுக்கு ஏற்ப பொருட்களின் விலைகள் மாறுவது போல அம் மனிதனின் வருமானத்தையும் சந்தை நிலைமைகளே தீர்மானிக்கின்றன. இ தன் காரணமாக மனிதன் உற்பத்தியை மேற்கொள்ளும் இயந்திரத்தின் ஓர் பகுதியாகக் கருதப்படுகிறானே தவிர ஓர் முழுமை பெற்ற மனிதனாக மாற் றப்படும் முயற்சி தடுக்கப்படுகிறது. எனவே தொழிலாளி என்பவன் விற்பனை செய்யக் கூடிய ஒரு பொருளை அதாவது உழைப்பை வைத்திருக்கும் ஒருவனாக முதலாளித்துவ சமூகம் கருதுகிறது.

இவ்வாறு மனிதனை வர்த்தகப் பொருளாக்கி அதன் மூலம் இ லாபமீட்டி கொழுத்து உப்பிப் பெருக்கும் முதலாளித்துவ சமூகம் முற்றாக மாற்றி அமைக்கப்பட வேண்டும். இதற்கான ஒரே வழி, எந்த சமூகம் தேசக் கட்டுமானத்தில் இருந்து அந்நியமாக்கப்பட்டதோ அந்த சமூகம் அதிகாரத் தைக் கைப்பற்ற புரட்சி நடத்த வேண்டும் என்பதே சண்ணின் இலட்சிய வேட்கையாக இருந்தது. இதன் காரணமாகவே இலங்கையின் மிகச் சிறந்த தொழிற்சங்க வாதியாக ஆயிரம் ஆயிரம் தொழிலாளர்களின் தலைவராக அவர் செயற்பட்டார். தொழிலாள வர்க்கத்தின் சம்பள உயர்வுக்காக ஏகாதிபத்திய ஆதரவுச்சக்தியான ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத் தில் பல போராட்டங்களுக்குத் தலைமை தாங்கினார். இலங்கையின் இ னவாத சக்திகளின் கூடாரமாக அமைந்துள்ள ஐ தே கட்சியின் ஆதரவு ஊடகங்கள் அவரின் பெயரை நாகலிங்கம் சண்முகதாசன் என முழுப் பெயரையும் குறிப்பிட்டு அவரின் தொழிற்சங்கத்துக்குள் இன வேற்றுமையை ஏற்படுத்த முயற்சி செய்தது. அவரை தோழர் சண் என்று மட்டுமே அறிந் து இருந்த சிங்களத் தொழிலாளர் மத்தியிலே அவர் ஒரு தமிழர் என்பதை அடையாளப்படுத்த இவ்வாறு குறிப்பிட்டு தனது இனவிரோத செயல்களை அவிழ்த்து விட்டனர். ஆனாலும் தோழர் சண் அவர்களை அத்தொழிலாளர் கள் தமது தோழராக அடையாளம் கண்டார்களே தவிர தமிழராக அவர் கள் காணவில்லை.

இலங்கையின் இடதுசாரிகளின் வரலாற்றிலே அறுபதுக்குப் பின் னரான காலகட்டம் முக்கிய பகுதியாகும். இலங்கையின் முக்கிய இ டதுசாரிக் கட்சியான லங்கா சம சமாஜக் கட்சியின் அரசியல் அணுகுமுறையில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன. பிரித்தானிய காலனித்துவ ஆதிக்கத்தக்கு எதிராக இலங்கையை விடுவிக்க வேண்டும் என்ற தேசியவாதத்தையும் தேசத்தின் பொரளாதார நிர்மாணம் சோசலிச கட் டமைப்பாக இருக்க வேண்டும் என்ற சோசலிச வாதத்தையும் வாதித்து வந் த லங்க சமசமாஜக் கட்சி இவ்வாறான சமூக அமைப்பை முதலாளித்துவம் வழங்கி உள்ள பாராளுமன்ற ஆட்சி முறையால் வழங்க முடியாது என நம் பி புரட்சிகர வழிகளில் அதாவது பாராளுமன்றம் அல்லாத வழிகளில் ஆட் சியைக் கைப்பற்றுவதே சரியான வழி என வாதித்து வந்தவர்கள் கூட்டணி அமைப்பைத் தவிர்த்தார்கள்.

காலனித்துவ ஆட்சியில் இருந்து தேசிய சுதந்திரத்தை மீட்பதற்கும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தை தொடர்ந்து நடத்துவதற்கும் ஏகாதிப த்திய எதிர்ப்பு அணி ஒன்றை உருவாக்க எத்தனித்தார்கள். ஏகாதிபத்தியத் துடன் பல்வேறு வகைகளில் வெளிப்படையாகவும் இரகசியமாகவும் உறவுகளை வைத்திருந்த இதர கட்சிகள் இவ்வணியில் இணைவதைத்



தவிர்த்து வந்தன. இலங்கையில் உள்ள பூர்சுவா வர்க்கம் ஏகாதிபத்தியங் களில் தங்கி இருந்தது. நாட்டின் பெரும் வர்த்தகத்துறையும் பெரும் தோட் டத்துறையும் பிரித்தானியர் கைகளில் இருந்தது. இதர கைத்தொழில் துறை யும் சிறு வர்த்தகமும் பூர்சுவாக்களின் கைகளில் இருந்தமையால் இவர்கள் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் ஏவலாளர்களாகச் செயற்பட்டனர்.

இதனை நன்கு உணர்ந்து கொண்ட தொழிலாளர் வர்க்கம் இ டதுசாரிகளின் பக்கம் சென்றது. புரட்சிகர அரசியல் அணுகுமுறை மூலம் நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றும் கனவுகளைத் தத்தெடுத்துக் கொண் டார்கள். புரட்சிகர வழிகளில் தொழிலாளர் அரசை ஸ்தாபிக்கப் போவதாக முழங்கிய தலைவர்கள் துரதிஸ்டவசமாக தமது சொந்த வாழ்க்கையில் தொழிலாளர் படும் இடர்களை அனுபவிக்கவில்லை. முதலாளித்துவ ஏகாதிபத்திய சுரண்டல்களின் கொடுமையை அனுபவிக்கவில்லை. பிரித் தானிய பல்கலைக்கழகங்களில் தமது கல்வியைத் தொடர்ந்ததால் லிபிரல் ஜனநாயக விழுமியங்களால் அவர்களும் ஈர்க்கப்பட்டார்கள். இதன் காரணமாக சட்டரீதியான ஆட்சி, ஜனநாயக சுதந்திரம், அரசியல் அமைப்பு ரீதியான ஆட்சி என்பவற்றை வலியுறுத்தும் தலைவர்களாக படிப்படியாக மாற்றம் பெற்றார்கள். இதன் காரணமாக முதலாளித்தவ ஜனநாயகம் வழங் கும் தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாக்கும் சக்திகளாக இவர்களது நடவடிக்கைகள் மாற்றம் பெற்றன.

1960ம் ஆண்டு மார்ச் மாதத்தில் இடம்பெற்ற தேர்தல் இ டதுசாரிகளின் போக்கில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது எனலாம். அரச அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற வலுவான விவாதம் இடதுசாரி இ யக்கத்தில் ஏற்பட்டது. 1959ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் பிரதமர் எஸ் டபிள்யூ ஆர் டி பண்டாரநாயக்கா படுகொலை செய்யப்பட்டார். இவரது கொலையின் பின்னணியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முக்கியஸ்தர்கள் சிலரும் பௌத்த பிக்குகள் சிலரும் செயற்பட்டனர். இவரது மரணத்தைத் தொடர்ந்து பெரும் அரசியல் நெருக்கடி ஏற்பட்டது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட் சி மிகவும் பலவீனமான சிறந்த தலைவர்கள் அற்ற கட்சியாக இருந்தது. அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான புரட்சிகரச் சூழல் இதுவே என்பதால் உடனே தேர்தலை நடாத்துமாறு வற்புறுத்தித் தாமும் அத்தேர்தலில் குதிக் கத் தீர்மானித்தனர் இடதுசாரிகள்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான பிரதான ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்தியாக இருந்த லங்கா சமசமாஜக் கட்சி 101 தொகுதிகளில் தனது அபேட்சகர்களை தனித்து நிறுத்தியது. இனப்பிரச்சினைக்குத் தீர்வாக சம அந்தஸ்துக் கொள்கையை இது காலவரை வலியுறுத்தி வந்த இக்கட்சி இ த்தேர்தலில் தமிழை உத்தியோகபூர்வ மொழியாக ஆக்குவோம் என மட்டும் தெரிவித்தது. சிங்கள இனவாதத்துக்கு இடதுசாரிகள் பலியாகிய கோரம் இ துவாக அமைந்தது. தேர்தலுக்காக தனது கொள்கையில் மாற்றத்தை ஏற் படுத்திய போதிலும் தேர்தலில் வெற்றி பெறாமல் படுதோல்வி கண்டது அக் கட்சி.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பற்றிய தவறான கணிப்புடன் தேர் தலில் ஈடுபட்ட லங்கா சமசமாஜக் கட்சி அது மீண்டும் இரண்டாவது பெரிய கட்சியாக வெற்றி பெற்றிருப்பதை அவதானித்ததோடு நாட தழுவிய ரீதியில் தமது செல்வாக்கு சரிந்து செல்வதையும் காண நேர்ந்தது.

தம்மால் தனித்து ஆட்சியை நடத்த முடியாது என்பதைக் கண் ட இடதுசாரிகள் கூட்டணி அமைப்பதைத் தவிர வேறுவழியில்லை என்பதை தெரிந்து கொண்டார்கள். புரட்சிகர வழியில் ஆட்சியைக் கைப்பற்றும் தமது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நீண்டகால நோக்கம் சந்தேகத்தக்குரியதாக மாற்றமடைந்தள்ளதைக் கண்டார்கள். இதன் காரணமாக அரசியற் கட்சிகள் குறித்த தமது பார்வையில் மாற்றத்தை ஏற்படுத்தினார்கள். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பற்றிய தமது அபிப்பிராயங்களை மாற்றிக் கொண்டார்கள். இதன் அடிப்படையில் 1964ம் ஆண்டு யூன் மாதம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டை ஏற்படுத்தினார்கள்.

இக்கூட்டு அமைப்பதற்கான மாநாடு 1964ம் ஆண்டு மே மாதம் இடம்பெற்றது. இம்மாநாட்டில் பெரும் பிளவு ஏற்பட்டது. தோழர் சண் உட்பட பலர் கட்சியின் முடிவுகளை எதிர்த்து வெளியேறினார்கள். தொழிலாளர் வர்க்கம் காட்டிக் கொடுக்கப்பட்டதாக முழங்கினார்கள். லங்கா சமசமாஜக் கட்சியின் இம்முடிவுக்கு எதிராக நாலாவது அகில மாநாடு கண்டனம் தெரிவித்தது. வர்க்கக் கூட்டணி அல்லாத கூட்டமைப்பு; பாராளுமன்றப் பாதை அல்லாத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் என எச்சரித்தார்கள். பிற்போக்கு முதலாளித்துவ பொருளாதாரக் கட்டமைப்பை இக் கூட்டமைப்பினால் மாற்ற முடியாது என கட்சியின் போக்கை எதிர்க்கும் எட்மன்ட் சமரக்கொடி கூறினார்.

தொழிலாளி வர்க்கம் தேசிய பூர்சுவாக்களுடன் கூட்டு அமைக்கும் விவகாரம் சீர் தத்துவார்த்தப் பிரச்சினையாக மாற்றம் பெற்றது. தொழிலாள வர்க்கத்தைக் கருவாகக் கொண்டிராத எந்தக் கூட்டமைப்பும் முதலாளித்துவ சீர்திருத்தவாதமென சீனாவின் கம்யுனிஸ்ட் கட்சி வாதித்தது. இலங்கையின் பிரதான இடதுசாரிக் கட்சிகள் தேசிய பூர்சுவாக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டமைத்து இருப்பது புரட்சிகர நோக்கங்களை மழுங்கடிக்கும் நோக்கமே என தோழர் சண் தெரிவித்தார். சீன கம்யுனிஸ்ட் கட்சி தொழிலாளர் விடுதலை குறித்துத் தெரிவித்த கருத்துக்கள் இலங்கையில் ஏற்பட்டுள்ள இடதுசாரிகளின் போக்கை விமர்சிப்பதாக அமைந்து இருந்தது. தொழிலாளர் வர்க்கத்தின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி தொழிற்சங்கங்களில் செயற்பட்டு வந்த தோழர் சண் அவர்களால் இப்போக்கை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. புரட்சிகர நோக்கத்தை இவ் இடதுசாரிகள் கைவிட்டு விட்டதாக குற்றம்சாட்டினார்.

இக்காலகட்டத்தில் தொழிற்சங்கங்கள் யாவும் இணைந்து தொழிற்சங்கக் கூட்டமைப்பை (Joint Commette of Trade Unions) உருவாக்கின. 21 கோரிக்கைகளை முன் வைத்து போராட்டத்துக்கு தயாராகின. இடதுசாரிகளுக்கும் தொழிற்சங்கங்களுக்கும் 1964ம் ஆண்டு மிகப்பெரும் பரிசோதனை ஆண்டாக மாறியது. கம்யுனிஸ்ட் கட்சி இரண்டாக உடைந்தது. லங்கா சமசமாஜக் கட்சியில் பிளவு ஏற்பட்டது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடனான கூட்டமைப்பில் இடதுசாரிகள் இணைவது குறித்த தீர்மானம் பெரும் விவாதத்தைக் கிளப்பியது. லங்கா சமசமாஜக் கட்சியினர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைவதன் மூலம் வர்க்க இணக்கத்தை ஏற்படுத்தித் தொழிலாளர் வர்க்கத்தின் நலன்களை பூர்சுவா வர்க்கத்திடம் அடமானம் வைத்து உள்ளதாகவும் தொழிலாளி வர்க்கத்தை இவ்வாறு கூறு போடுவது புரட்சிகர நோக்கத்தை கைவிடச் செய்வதோடு முதலாளித்துவத்தைப் பலப்படுத்துவதாக அமையும் என சண்முகதாசன் போன்றோர் எச்சரித்தனர்.

தனது இறுதிக் காலம் வரை புரட்சிகர நோக்கங்களைக் கைவிடாத ஒரே தலைவராகவும் தாராளவாதக் கொள்கைகளால் ஈர்க்கப்படாதவராகவும் இருந்த சிறந்த தொழிற்சங்கவாதி தோழர் சண் அவர்களே.

**மு.சிவலிங்கம்**





## திரு சண்முகதாசன்

எனது அனுபவத்தில் 1960கள் தொடக்கம் திரு சண்முகதாசன் அவர்களின் அரசியல் பங்களிப்பை நான் நன்கறிவேன். இலங்கைப் பொதுவுடைமைக் கட்சியில் முக்கிய தலைவர்களான மருத்துவக்கலாநிதி எஸ்.ஏ.விக்கிரமசிங்க, பீட்டர் கெனமன் ஆகியோருடன் இணைந்து பணியாற்றிய சண்முகதாசன் அவர்கள் 1960 களில் முற்பகுதியில் சர்வதேச பொதுவுடைமை இயக்கம் சோவியத் யூனியன் சார்பாகவும் சீனா சார்பாகவும் பிளவுபட்ட போது, சீனச்சார்பு பொதுவுடைமைக் கட்சியை உருவாக்கினார். சோவியத் சார்புப் பொதுவுடைமைச் சித்தாந்தம் மார்ச்சியக்கோட்பாடுகளைத் திரிவுபடுத்தி விட்டதாகக்குற்றச் சாட்டிய சண்முகதாசன் மாசேதுங்கின் தீவிர ஆதரவாளரானார். இலங்கையின் சோவியத்சார்புப் பொதுவுடைமைக்கட்சியினர், மார்சியவாதிகள் கடுமையாக விமர்சித்துவந்த முதலாளித்துவ பாராளுமன்ற முறையை ஏற்றுக்கொண்டதை கடுமையாக சாடிய சண்முகதாசன் தொழிலாளர்வர்க்கம் ஒரு வர்க்கப் போராட்டத்தினூடாகவே விடுதலை பெறமுடியும் என்பதை வலியுறுத்தினார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அமெரிக்க ஏகாதிபத்தியம் மற்றும் முதலாளித்துவ சக்திகளுடன் சமாதான சகவாழ்வு என்று சோவியத்யூனியன் முன்வைத்த சிந்தனைகளைத் திரிபுவாதம் எனக் கடுமையாக விமர்சித்த சண்முகதாசன் தீவிர புரிட்சிகர சித்தாந்தத்தை முழுமையாக ஏற்றுக் கொண்டார்.

1964 இல் இலங்கை சுதந்திரக்கட்சியும் இடதுசாரிகள் இணைந்துகொண்டதைக் கடுமையாக விமர்சித்த சண்முகதாசன் அதனை இடதுசாரி இயக்கம் கண்டமோசமான பின்னடைவு எனச்சாடினார். தொழிற்சங்க இயக்கத்தில் முக்கிய சக்தியாக விளங்கிய சண்முகதாசனின் இயக்கம் மலையகத்திலும் சக்தி வாய்ந்த செங்கொடிச் சங்கத்தை உருவாக்கியது.

ஜே . வி. பி தலைவர் ரோஹன விஜயவீர தற்போது நோர்வே நாட்டில் பேராச-ிரியராகப் பணியாற்றும் என். சண்முகரத்தினம் இங்கிலாந்தில் உயர்பதவி வகிக்கும் மருத்துவக்கலாநிதி எம்.எஸ். தம்பிராஜா தற்பொது புதிய ஜனநாயகக்கட்சியின் முக்கியஸ்தராக விளங்கும் செந்திவேல் மலையக தொழிற்சங்க தலைவர்களான இராமையா, ரோஜாரிறோ பெர்னாந்து போன்றோர் சண்முகநாதனின் பாசறையில் வளந்தவர்களாவர்.

1960 களில் இடதுசாரி இயக்கத்திலும் பாராளுமன்ற அரசியலும் ஜாம்பவான்களாக விளங்கிய கலாநிதி என். எம். பெரேரா, கலாநிதி கொல்வின் ஆர்.டி. சில்வா, பேர்ணாட்சொய்சா, பீட்டர் கெளமன் ஆகியோருக்குச் சித்தாந்தரீதியாகச் சவால்விடுக்ககூடிய அறிவாற்றல், ஆழ்ந்த புலமை, பேச்சுத்திறன் என்பவற்றைப் படைத்தவராத் திகழ்ந்தவர் சண்முகதாசன். ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய மும்மொழிகளிலும் ஆழமான அரசியல் பேருரைகளை அவர் நிகழ்த்தக் கூடிய-வராக விளங்கினார்.

மார்க்சிய சித்தாந்தம்,மாசேதுகிள் சிந்தனைகள் என்பவற்றில் மிகுந்த அறிவும் பற்றும் கொண்ட சண்முகதாசன் ***மார்க்சிய நோக்கில் இலங்கை வரலாறு*** என்ற ஒரு நூலையும் எழுதியுள்ளார். 1971 ம் ஆண்டில் இடம் பெற்ற ஜே . வி. பி கிளர்ச்சியின் காரணமாக சந்தேகத்தின் பேரில் சிறைவாசம் அனுபவித்தவர்களில் சண்முகதாசனும் ஒருவர். அச்சிறைவாசத்தின்போதுதான் அவர் இந்நூலை எழுதினார்.

இன்றைய இனப்பிரச்சனையைப் பற்றி மார்சிய நோக்கில் ஆழமாக சிந்தித்து அரிய கருத்துக்களைத் தந்திரக்கக் கூடியவர் அவர். அவர் இன்று இல்லாதது மார்க்சிய அறிவுலகுக்கு மட்டுமன்றி இலங்கைவாழ் தொழிலாளர் சங்கத்திற்கும் மாபெரும் இழப்பு என்பதில் ஐயமில்லை.

இவரது சிந்தனைகள் தமிழர்களை மட்டுமன்றி ஆயிரக்கணக்கான சிங்களதோழர்களையும் கவர்ந்திருந்தது. சரியாகச் சொன்னால் சிங்கள தொழிலாளர்களின் ஆதரவே இவருக்கு ஒருகாலத்தில் அதிகமாக இருந்தது.

**பேராசிரியர் சோ.சந்திரசேகரன்.**
**கொழும்பு பல்கலைக்கழகம்**



**A.Sivanandan**

# N.Shanmugathasan: an Appreciation

**In** every Third World County there is a Fidel or a Giap who does not quite make it to revolution, but who, in his or her fight against injustice, intolerance and inequality embodies the mores, the values, and the dedication of the revolutionary-and therein sets the seeding socialism to root.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Shan was such a man. For him, there was no short cut to socialism, no parliamentary road, no compromise between means and ends: the means predicated the end. And so he never attained to power, never became an MP (though, in a moment of aberration, he once contested an election), never reduced his politics to populism.

Yet he was a man of the people, a servant of the working class. From the moment he came across Marx at university in 1939 to the day he died, Shan devoted himself to the cause of the proletarian revolution and the pursuit of a classless society-following first in the path of Lenin and Soviet communism and then, after 1963, turning to Mao's China for guidance. In that journey, he was trade union leader and activist, pamphleteer and polemicist, soldier and savant.

government disenfranchised and dispossessed Indian plantation workers and rendered them electorally untouchable to the Left, it was Shan who took up their cause through the Red Flag Union and brought the sense of worth and fight and militancy. When Hindu society, in its most virulent caste-ridden phase, had closed not only its temple doors but the doors of public places on the depressed castes, it was Shan, the untouchables into the very halls of the Brahmins and virtually drove the priests from the temples.

Shan was a guru in the traditional sense, a teacher by example and precept, an exemplar both in public and private life. At a time when the Sri Lankan polity has become totally corrupt, he remained untouched by venality or power. At a time when intellectual life in Sri Lanka has become uniformly sordid and despicable, Shan retained an intellectual probity which shone like a beacon in a darkening world. At a time when the most horrendous communal carnage, Shan clamored for justice Sinhalese, Tamil and Muslim peoples alike. The distinction he made between people and government was not theoretical sophistication but a deeply felt sensibility.

Shan had a brilliant dialectical mind that grasped a situation before anyone else had seen it and a political instinct which saw things ahead of the people he led. And so, in a sense, he was not only before his time but, alas, before his people so to speak-alone on a peak in Darien.

**A.Sivanandan,**
Director, ***Institute of Race Relations***,
Editor ***Race & Class***.



**Ajith Samaranayake**

# The last salute of a revolutionary

The death of N. Sanmugathasan extinguishes a flame which had been kept aglow largely because of him, and if it was solely due to his efforts.

The man who in his autobiography called himself an unrepentant communist was also an unrepentant Stalinist, who while communism was collapsing all round him kept the memory of Stalin and later Mao Tse Tung whom he saw as Stalin's logical successor alive in the public mind.

While first china and later Albania repudiated, beloved Mao and severed their old ties with him Shan doggedly defended the faith until in truth it could be said that he was the last upholder of the triumvirate Marx, Lenin, Mao.

Nagalingam Sanmugathasan who died last Sunday in Birmingham, England, at the age of 74, was a phenomenon of his times. The son of a middle-class Jaffna family he decided to be a full-time revolutionary in his second year at the university. He was one of the earliest leaders of the communist Party, and as the general secretary of been one of the most vigorous champions of the working class in Sri Lanka.

He was Sri Lanka's foremost Maoist and a communist of rare integrity



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

who neither crossed the class divide nor abandoned the faith of his early youth. This year he completed his fifty years in politics even as he bade his last salute to the movement he so loved.

In his autobiography 'political memoirs of an unrepentant communist' published in 1989, he evokes something of those heady days of his university life. He belonged to the last batch to enter University College, and after completing his studies at St. Joseph's in Colombo for a year since he was underage by three days to enter the university. (the age limit was 17). There he studied history and be come secretary of the union society when Esmond Wickremasinghe, later to become the lake house baron and UNP guru, was then the leader of the LSSP group in the university , while Shan led the communists.

An amusing incident he recalls is when Esmond, Shan and Arabi Saravanamuttu, son of Ratnajothi Saravanamuttu, a former Mayor of Colombo and MP for Colombo north, were suspended for distributing an anti -war leaflet. Recalls Shan, 'it was fortunate that the other two came from rather well-to-do and influential families. Otherwise, I doubt whether I would ever have been reinstated.

So class influences did operate sometimes to a revolutionary's advantage, and the boy from Manipay who was outside the traditional Royal-Thomian charmed circle went on to become the president of the union society making a speech in the presence of vice chancellor Sir lvor Jennings, that formidable imperialist, attacking Jennings, concept of a unitary residential university at the annual dinner.

Recalls Shan, as I sat down he told me I had misunderstood him. He invited me to tea at the Galle Face hotel, where he was staying, for a discussion the next day. I did go but neither of us convinced the other.

The young revolutionary who took afternoon tea (also called ' tiffin') with Jennings at the Galle face hotel , the hub of colonial social life , had no hesitation in becoming a party full- timer on graduation. He received an allowance of Rs.60.

The parents were naturally disappointed for they had thought that the son whom they had educated at some expense (his father was a rubber-maker on an estate) would try for the civil service, but they accepted his decision philosophically. His mother only asked him what he would do in his old age. He still remembers his confident reply, by then we would have socialism

Socialism to Shan was a matter of intellectual conviction, not emotional appeal. lt was john Strachey's why you should be a socialist' which convinced him . Later a labour cabinet minister, strachey, who was also author of 'the coming struggle for power ' was a powerful writer and polemicist , and something of a prophet on the left.



An interesting feature of shan's development was that he was never attracted by Trotskyism which he seems to have always viewed as an intellectual fad of affluent progeny who had received an education abroad. He also belonged to a band of Tamil communists who had some influence on the politics of the north before it become pock -marked by communalism. The others were a Vaidialingam and P.Kandiah while M. Sivasithamparam later a Tamil congress MP and president of the TULF was also a strong communist till 1952.

Shan first made his mark in local politics as a dynamic trade unionist. He began his career in 1943 during the twilight of British imperialist rule. By then the hegemony of A.E.Goonesinhe over the labour movement had been shattered and the workers had become radicalized under the banner of the left. Under the Defense Regulations strikes were banned in the essential services and employers were also prohibited from locking out workers.

The CTUF was particularly strong in the tea and rubber trades and among the engineering workers. Since then Shan has been in the forefront of all working class agitations such as the south western Bus company strike of 1953, the Hartal of 1953 and the General strike of 1958 led by the CP, which had to be abandoned when communal violence broke out for the first time since independence.

He remembers negotiating personally will S.W.R.D.Bandaranaika during the Brooke bond strike because the Ceylon Employers federation then did not recognize the CTUF because it was led by communists.

One of the most historic strikes which he led was the CTB strike of December 1962 January 1963, where he led was the CTB strike of December 1962-january 1963, where he personally led the Ceylon motor workers' union against the wishes of the communist Party. The reason Shan claims was that the CP was against the strike because it was nursing hopes of entering in to a coalition with the then ruling SLFP and the LSSP.

History beckoned at Shan in September , 1963 when following the great ideological schism in the hitherto monolithic world communist movement it fell to his lot to lead the pro- Chinese faction in the great debate within the Ceylon communist party . The schism followed the repudiation of Stalin by Khrushchev at the 20th congress of the communist party of the Soviet Union. The Chinese communists, led by Mao, did not endorse the soviet line and set themselves up as the true upholders of Marxism and Leninism and thus a rival camp within the communist movement.

The Ceylon communist Party decided to endorse the Soviet stand and expelled Shan who was the leader of the Chinese faction. He was also expelled from the CTUF, but fought tenaciously and at the next congress won a majority of the union to his side. The CP had to eat humble pie and establish its own union, the Ceylon federation of Trade union (CFTU) with an



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

initial membership of 50.

The communist party which Shan formed and ed subsequently was committed to the proletarian revolution as against the peaceful transition to socialism through Parliament which the pro- soviet camp seemed to advocate. Through its journals 'Kamkaruwa' 'Red flag' and the Tamil journal it propagated its message vigorously in the Sixties.

There was also another punchy weekly 'Pragathiseeli gamana' edited by a sympathiser, I.Karannagoda, later to be an ambassador to china. Trade union work continued apace in the cities while the red flag unions in the plantations be come a major force. Shan also took the struggle to the then placid and dormant north, where he rallied the depressed castes to challenge the prohibition placed on them by the high castes form entering Hindu temples. These were the first stirring of militancy in the north.

In Chankanai a high caste man who had killed a depressed class person by blatantly firing at a funeral procession and was later killed in the bazaar in broad daylight.

The ancient Maviddapuram temple was the site of the monumental struggle for temple entry. the bourgeois press , as Shan called it, had a whale of a time covering the titanic fight between Shan , the godless communist , and a former university college guru , Prof . C. Suntheralingam a one-time revolutionary now turned renegade and fighting to keep the hoi polloi out of the sacred precincts. Playing referee was the then superintendent of police, Jaffna, R. Suntheralingam, who later made a name as an anti-narcotics crusader in the police. The juicy saga of Shan and the tow suns made regular newspaper headlines. Those were without doubt the best years of Shan's political .life.

Shan also played more than a seminal role in on of the most vital developments in Sri Lanka's politics when he gave party membership to Rohana Wijeweera , who had returned from Moscow as a Chinese sympathiser. Shan remembers Wijeweera showing him his return ticket which he could not use because the soviets had denied him a visa. Shan later admitted that he and the party had been misled by Wijeweera's anti- Sovietism because it was the Communist party (Peking) which Wijeweera used as a base and a nucleus for the JVP. Since then Shan has been against the JVP on principle although this did not prevent the panic stricken united front government from clapping stricken United front Government from clapping his in jail in 1971 following the insurrection.

Shan was in jail from April 12, 1971 to February 2, 1972 being kept in detention variously at the remand jail in Welikada, the Vidyalankara camp, the prison hospital and the General Hospital. He refused to shave in protest and grew a long beard which mead his look like an Old Testament prophet. A diabetic, he also suffered form a chronic spondolosis of the spine. A fellow detenue was Vasudeva naaayakkara, a member of parliament and already a fiery leftist



In prison he wrote two books, **A Marxist looks at the history of Ceylon** ' and **A short History of left movement in Ceylon.** Prison life has one positive aspect he says 'Your mind is completely undisturbed to appoint that can never be achieved outside. You know nothing, absolutely nothing could disturb you had absolute peace such a situation is conducive to writing'.

The death of Mao saw his successors repudiating him. It also saw the straining of ties between Shan and the Chinese CP until they were finally severed when a group split from him and was recognised by the Chinese party . Relations between the Chinese CP and Shan had been placed under strain when the Chinese Government decided to back the united Front Government of Mrs. Bandaranaika in 1971 during the insurrection. Shan while denouncing the JVP for its adventurism, condemned on the youth.

Later Shan was to be further disillusioned when the Albanians, who had always staunchly stood by Mao, joined the Chinese in condemning him. Shan had always been a welcome visitor in both if his Albania and this apostasy on the part of his most beloved comrades saddened his greatly.

Towards the end of his life, however, there was a fresh stirring of hope when there was an ingathering of the faithful and a conference was held under the auspices of the revolutionary communist party of the USA and that of Chile. As the second most senior delegate at the age of 64 (the oldest was ten years older). He was looked up to as a leader and chaired the press conference in London which announced he decisions of the conference.

The conference brought together Marxist Leninist parties form 18 countries and constituted for Shan the last hope for the communism which he had embraced in his youth.

With the setbacks suffered by socialism and deprived of his party, Shan was in virtual political hibernation towards the end of his tumultuous life, but never dormant or complacent. From his up stair home in Schofield place in Bambalapitiya he observed political developments in Sri Lanka and worldwide keenly, reading and writing and corresponding.

I had several letters from him during the last several years on political issues which he prescribed however were not for publication. They were invariably written on note paper with pretty floral designs. His last letter after the killing of Wijeweera rebuked me for my essay on the man whom his party had delivered to politics, but whom he had always opposed on principle. Shan wrote that I was almost soft on Wijeweera

.During the last year his daughter, a doctor and a qualified acupuncturist, persuaded him to join her in England though it was not a setting much to his liking. He complained of boredom. And so came the end for a man who was



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

an unflinching communist revolutionary against all odds, a long way off from the scenes of his triumphs. But he died in the home of Marx's exile, the country in which the old master had written the monumental **'Das Kapital'** unrepentant to the last.

Shan's greatest contribution to the left movement in Sri Lanka will be his exposition of the thoughts of Mao Tse Tung.

He also did not diviate an iota from his belief in an armed revolution as against the peaceful transition to socialism. But the contradiction which Shan had to face was that while Mao's thinking was basically grounded on a theory of agrarian revolution and a method of encircling the towns through the villages the peasantry in Sri Lanka was backward and lacking in any revolutionary consciousness.

In this lacuna, Shan resorted to organizing the urban workers, the plantation workers and the depressed castes of the north .but this could never cohere in to a systematic organisation. What is more, as a Tamil he was crippled in advance in his potential for national political leadership, even in a revolutionary party, in a country where race religion and caste matter in a leader.

There was also a feeling among his followers that he was not a party man, that he was not easy to work with and that he had a prickly temper. But it is also true that he was badly served by his followers. When he was in prison for almost a year there wasn't a single voice of protest raised against his detention by his own party.

The greatest single tragedy of Shan's political career however was that the revolution he advocated was aborted by the very men whom he nurtured. The armed revolution Shan advocated, the violent seizure of state power, Wijeweera tried to do twice in various and distorted forms. What Shan advocated others ran away with and traduced.

But yet that he stood for all this in full 50-year revolutionary political career, spanning 74 years renouncing the comfortable life that would undoubtedly have been his lot as a graduate and sacrificing every inch of the way is the true measure of the man.

His contribution as a trade unionist and an educator of the worker's movement, as a leader who led by example, was immense. Such men will hardly be born again in a land fast becoming a home for pigmies and mediocrities, time- servers and hurrah boys. That he led a fighting life and fought to the last , that he refused to leave the barricades while others were retreating all round him - such are the memories of which legends are made.

**Ajith Samaranayake**



**M.Sooriasegaram**

# My memories of Comrade Shan

I grew up in the fifties at Alaveddy, a village in the North of Sri Lanka, where democracy, freedom of speech and political and intellectual debates of the highest standards flourished. I became politicised at a very young age. I joined the Communist Party in 1957 at the age of 15 as a candidate member and read the Communist manifesto by Marx and Engels, which gave me convincing explanations on how society worked. I was highly influenced by it. In the course of my party work I attended many lectures given by Marxist intellectuals.

The most convincing and intellectually satisfying lectures at that time came to me from Comrade Shan. So much so that when I was studying for my A-level at Mahajana College we invited Shan to take part in a debate on the National Question, which was a hotly debated subject even at that time. Mahajana College management was then rightwing, Hindu, cast conscious, obscurantist and strangely also slavishly pro-British. Its Principal



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

was an embodiment of all the above. It was with great difficulty we managed to secure permission for Shan's participation on this debate. Naturally Shan first offered to speak in Tamil because majority of the audience will not be comfortable with English. The Principal Mr. Jayaratnam insisted that Shan should speak in English. Shan spoke in English in the most convincing manner. The atmosphere was electric. He knew the facts. His arguments were clear, logical and dialectical. His presentation was wholesome. With great ease he demolished the arguments of the opponents with unanimous applause. He received a standing ovation from an audience, which was essentially anti communist. He completely swept the floor. He demonstrated the moral and intellectual honesty of Communists. He put forward the official policy of the Communist Party on the National Question, the concept of Regional Autonomy. After 50 years of blood shed, the correct answer to the National Question in Sri Lanka is still the same policy that was so powerfully argued then by Shan.

This was my first taste of Shan's clear Marxist thinking. Since then I had the pleasure of listening to him on many Marxist subjects. He thinks and analyses problems dialectically. He is well read. He studies and researches every topic meticulously and with intellectual honesty. He passionately believes in the liberation of the oppressed and is unique in having dedicated his whole life in leading the struggles of the working class. Till the day he died he never regretted any of the roles he played. He never aspired for power and privilege for himself. These are rare characters to be found in politicians in Sri Lanka.

He has a remarkable ability to analyse past, present and evolving class struggles and social upheavals and to forge correct policies and programmes. He is brave, honest, principled and unwavering in all his political activities.

He was probably the only Marxist I know in Sri Lanka who spoke and wrote profusely in all 3 languages on all the major issues of class struggle in Sri Lanka. He has a unique understanding of the dialectical connection between the past, present and the future. He is probably one of the very few who understood the strategic importance of the plantation workers. His book on "The future of the plantation workers" is the only book that has been written with a Marxist perspective as far as I am aware.

Shan will be fondly remembered as an outstanding Marxist, working class leader and an intellectual giant who has never betrayed the interests of the oppressed.

**M.Sooriasegaram**
**3 April 2004**



**N. Shanmugaratnam**

# Political Memoirs of an Unrepentant Communist

The contributions of Sanmugathasan to the revolutionary movement in Sri Lanka may be a subject of controversy among Political historians, Marxist intellectuals and left organizations, but there cannot be any dispute about his leading role in creating the Maoist movement in Sri Lanka. Sanmugathasan became a communist in 1939 when he was still an undergraduate. He published his political memoirs in 1989 at the age of 70, after completing fifty years of active life as a communist revolutionary. To give fifty years of active life unreservedly to the cause one believes in is, in itself, an extraordinary human sacrifice. It is, however, not my purpose here to evaluate Sanmugathesan (Shan, as he is known to all) as an individual. Shan himself may object to such an assessment, for in his life the political organization and the personal have merged almost imperceptibly. So when one recalls the ups and downs, the successes and failures of Shan in the last fifty years, one is actually reviewing the career of the political organization he led and the country's left movement in general.

Shan joined the Ceylon Communist party as a full-timer in July 1943, two weeks after its founding and as soon as he sat the final examination at the university. The party paid him a monthly allowance of sixty rupees. The decision to become a full time of the CP disappointed his parents who, with their humble means, managed to give him a university education with the dream of seeing him as a colonial civil servant. Concerned about her son's future security, Shan's mother asked him what he would do in his old age. The young communist replied, 'By then we would do have had socialism`.

But history did not move along the path appointed by the CP or any other revolutionary party in Sri Lanka. Instead, the past fifty years saw the rise and fall and the fragmentation and disintegration of the socialist movement. The early radicals, who set out, with great zeal, to change history, became its prisoners within two decades. They were enticed by the deceptive but seductive short cuts history appeared to offer in the form of Sinhala Nation-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

alism and sharing of the left movement via cabinet portfolios. Most of the pioneers of the left movement steered their parties on to the road of capitulationism through a series of class compromises. Shan stood out against the trend and, when the Moscow- Peking split occurred, he left the CP with a handful of comrades to found the ("Maoist") Communist party of Ceylon (CPC).

The Memoirs are by no means a series of anecdote; they are pieces of history as experienced and watched by the CPC (and the CCP before that) and reconstructed by its leader. Even where the author looks at events and personalities outside the Maoist movement (for instance, his evaluation of the late Mr. Bandaranaike), his approach is firmly based on the party line. The 'facts' of the events and the author's ideological interpretation form an amalgam: the political line runs right through the book like a red thread.

Of the many struggles led by the CPC and recounted in the Memoirs, two are most remarkable from a politico-historical perspective: the struggle against casteism in Jaffna and the mobilisation of the plantation workers by the Red flag Union in the 1966-70 periods. In both these struggles the CPC championed the causes of two of Sri Lanka most deprived and depressed communities. Only a leadership which cared for social justice and had no thought of courting popular acclaim or votes could have dared to launch such struggles. That the movement against untouchablity in particular should have been led by a 'high-caster' Tamil and taken right into the heartland of vellala Tamil society was itself a brave act. That it achieved considerable success in getting temples and some other public places open to the depressed castes attests to the shrewdness of the leadership. But the most significant achievement of all was the confidence and militancy it instilled in the untouchable – a people who had for centuries been oppressed in the most shameful and barbaric ways by Hindu society.

Similarly, the Red Flag Union gave the thousands of disenfranchised, plantation workers who were its members a sense of belonging and a spirit of militancy, at a time when the other left parties had turned their backs on them because they no longer had the vote.

However, it is also remarkable that these two great phenomena were short lived and the CPC has been conspicuously absent in the momentous liberation struggle that followed in the North and East. Untouchabillty has not disappeared from Tamil society, but the struggle against the oppression of the Tamil people as a whole by the self-proclaimed Singhala Buddhist state has subsumed and subverted the struggle against casteism. While this signals something about the politics of the dominant Tamil liberation organisation, it also raises a serious question about the politics of the CPC. Why has the CPC not been able to play an active role in the Tamil liberation struggle?



This question takes us to the heart of the self-imposed theoretical dilemma of many Marxist revolutionaries in Sri Lanka: the relation between class and nationalism. Having condemned and rejected the pro-Sinhala chauvinism of the major 'marxist' parties (the LSSP and CP), the CPC sought to rise above both Tamil and Sinhala nationalisms by turning to theoretical abstraction and over looking the living revolutionary potential of the Tamil liberation struggle, And by so defining themselves out of the tamil liberation struggle, the CPC and many individual Tamil Marxists served to contribute to the strengthening of chauvinist tendencies within the tamil struggle itself. Today, Tamil nationalism has taken a militant ideological form that sometimes looks like a mirror image of Sinhala chauvinism. Or, as Sivanandan puts it, 'the uneasy mating of bourgeois historicism with historical materialism continues to plague the theory and practice of Tamil nationalism even today.'

In the Memoirs Samugathesan does, nonetheless, defend the Tamil people's right to nationhood while providing at the same time an insightful critique of the Tamil liberation struggle. Of the Tamil militants, he writes:

*They also failed to follow tactics of people's war, as enunciated by Mao Tse Tung, which was the only tactics which would have gained them success in a complex war against superior forces. Almost all the militant organisations were guilty of anti-people activities like robbery, extortion, assault, and murder buttheir worst crime was the killing of the innocent Sihalese and Tamils. At the same time they refused to arm the people and draw them into the fight against the enemy.*

Very valid Points indeed, but more important is that the CPC itself had failed to apply the Maoist theory to the concrete conditions of the Tamil struggle. And there, at least, there must be cause for repentance in this 'unrepentant communist'.

Even so, ***Political Memoirs of an Unrepentant Communist*** is an authoritative work by a most respected Marxist intellectual and Trade unionist in Sri Lanka. Sanmugathesan has been the political mentor for generations of Marxist intellectuals though out the country. In the 1960s I was among those who flocked to his political classes at Peradeniya University and his union's offices in Colombo and discovered him to be one of the great dialecticians of our time. The Memoirs, like his lectures, is clear and enjoyable, but above all it is an outstanding historical document of and from an intrepid Marxist-of whom there are scarcely any left in our country today.

N. Shanmugaratnam



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**Shanmugathasan Centre for Marxist Studies**
59/3, Waidya Road, Dehiwala, Sri Lanka

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்